PDF ISLAM

فَضَائِلُ الصَّلَوٰةِ

ஸலவாத் கூறுவதின் பலன்கள்

40 ஹதீஸ்கள்

மௌலவி அல் ஹாஜ் வடகரை
எம். ஏ. ஷைகு ஹுஸைன் பாகவி.

வெளியீடு:
அல் பாரீ பப்ளிகேஷன்ஸ்
No.11, முதல் தெரு, சாதிக் பாஷா நகர்,
ஆழ்வார் திருநகர், சென்னை - 600 087.
தமிழ்நாடு. போன்: 4810875

முதற்பதிப்பு: ஹிஜ்ரீ 1419. கி.பி. 1998 செப்டம்பர்

PDF ISLAM

பொருளடக்கம்

PDF ISLAM

بسم الله الرحمن الرحيم

الحمد لله رب العالمين والصلوة والسلام على رسول الله صلى الله عليه وسلم وعلى اله واصحابه ومن تبعهم الى يوم الدين

ஸலவாத் கூறுவதின் பலன்கள்

அல்லாஹ்வும், அவனது (மலக்) அமரர்களும் நபீ மீது ஸலவாத் கூறுகின்றனர்

إِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا۔

அல்லாஹ்வும், இன்னும் அவனது (மலக்) அமரர்களும், நபீ (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்) மீது ஸலவாத் கூறுகின்றனர். (எனவே) ஈமான் கொண்டவர்களே! நீங்களும் (நபீ) அவர்கள் மீது ஸலவாத்தும் இன்னும் ஸலாமும் கூறுங்கள். ***(அல் குர்ஆன் - 33-56)***

அல்லாஹு தஆலா தனக்கு நெருக்கமான (மலக்) அமரர்களிடத்தில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறுகின்றான். மேலும் அவனது மலக்குகளும் ஸலவாத் கூறுகின்றனர். பின்பு இவ்வுலகில் உண்டான முஸ்லிம்களிடம் நீங்களுடம் நபீ மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுங்கள் என்று கூறுகின்றான். இதன் மூலம் வானம், பூமியிலுள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுகின்றனர். இது அல்லாஹ்வின் பிரியமாகும்.

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹழ்ரத் நபீ மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் பனீ இஸ்ராயீல் மக்கள், உமது இறைவன் ஸலவாத் கூறுகின்றானா? என்று கேட்டபோது, கண்ணியமும், கம்பீரமும் உள்ள ரப்பு (அல்லாஹ்) மூஸா அலைஹிஸ் ஸலாம்

அவர்களை அழைத்து, யா மூஸா! உமது ரப்பு ஸலவாத் கூறுகின்றானா என்று அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். நானும் எனது மலக்குகளும் என் நபிமார்கள் இன்னும் என் ரஸூல்மார்கள் மீது ஸலவாத் கூறுகின்றோம் என்று அவர்களிடம் கூறுங்கள் என்று கூறினான். *(தப்ஸீர் இப்னு கஸீர்)*

அல்லாஹ் ஸலவாத் கூறுகின்றான் என்பதின் பொருள், அல்லாஹ் ரஹ்மத் - அருள் புரிகின்றான் என்பதாகும்.

மலக் - அமரர்கள் ஸலவாத் கூறுகின்றனர் என்பதின் பொருள் ஸலவாத் கூறியவர்களுக்காக அவர்கள் அல்லாஹ்விடம் மன்னிப்பு தேடுகின்றனர் என்பதாகும்.

அல்லாஹ்வும் அவனது அமரர்களும்
முஸ்லிம்கள் மீது ஸலவாத் கூறுகின்றனர்

هُوَ الَّذِيْ يُصَلِّيْ عَلَيْكُمْ وَمَلٰئِكَتُهٗ

அவன் தான் உங்கள் மீது ஸலவாத் கூறுகின்றான் இன்னும் அவனுடைய அமரர்களும் உங்கள் மீது ஸலவாத் கூறுகின்றனர். *(அல் குர்ஆன் - 33-43)*

اَلَّذِيْنَ اِذَآ اَصَابَتْهُمْ مُّصِيْبَةٌ قَالُوْٓا اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رَاجِعُوْنَ
اُولٰٓئِكَ عَلَيْهِمْ صَلَوَاتٌ مِّنْ رَّبِّهِمْ وَرَحْمَةٌ وَاُولٰٓئِكَ
هُمُ الْمُهْتَدُوْنَ

அவர் (முஸ்லிம்)கள் தங்களுக்கு எத்தனை கஷ்டம் ஏற்பட்டபோதிலும் நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம் என்று கூறுவார்கள். இத்தகையவர்கள் மீது தான் அவனுடைய இறைவனின் ஸலவாத் - ஆசீர்வாதங்களும் கிருபையும் ஏற்படுகின்றன. மேலும் இவர்கள்தான் நேரான வழியையும் அடைந்தவர்கள். *(அல் குர்ஆன் 2-156, 157)*

40 ஹதீஸ்கள்

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۰

١ عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : مَنْ صَلّٰى عَلَيَّ صَلَاةً وَّاحِدَةً صَلَّى اللهُ عَلَيْهِ عَشْرًا . رواه مسلم ، وابوداؤد .والنسائى ، والترمذى

1 ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: என் மீது ஒரு தடவை ஸலவாத் கூறுபவருக்கு அல்லாஹு தஆலா அவர் மீது 10 தடவை ஸலவாத் - அருள்புரிகின்றான். *(நூல்: முஸ்லிம், அபூதாவூது, நஸயீ, திர்மிதி, இப்னு ஹிப்பான்)*

٢ وَعَنْ اَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : مَنْ ذُكِرْتُ عِنْدَهُ فَلْيُصَلِّ عَلَيَّ . وَمَنْ صَلّٰى عَلَيَّ مَرَّةً صَلَّى اللهُ عَلَيْهِ بِهَا عَشْرًا . رواه احمد . والنسائى

2 ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நிச்சயமாக நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள், ஒருவரிடம் என்னைப் பற்றி கூறும் போது அவர் என்மீது ஸலவாத் கூறிக் கொள்ளவும். எவர் என்மீது ஒரு தடவை ஸலவாத் கூறினால் அல்லாஹு தஆலா அவர் மீது 10 தடவை ஸலவாத் - அருள் புரிகின்றான்.

٣ وَعَنْ عَبْدِ الرَّحْمٰنِ بْنِ عَوْفٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : خَرَجَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاتَّبَعْتُهُ حَتّٰى دَخَلَ نَخْلًا فَسَجَدَ

فَاَطَالَ السُّجُوْدَ حَتّٰى خِفْتُ اَوْ خَشِيْتُ اَنْ يَّكُوْنَ اللّٰهُ قَدْ تَوَفَّاهُ اَوْ قَبَضَهُ .قَالَ . فَجِئْتُ اَنْظُرُ فَرَفَعَ رَأْسَهُ فَقَالَ : مَا لَكَ يَا عَبْدَ الرَّحْمٰنِ ؟ قَالَ فَذَكَرْتُ ذٰلِكَ لَهُ . قَالَ . فَقَالَ اِنَّ جِبْرِيْلَ عَلَيْهِ السَّلَامُ قَالَ لِيْ ! اَلَاۤ اُبَشِّرُكَ اَنَّ اللّٰهَ عَزَّ وَجَلَّ يَقُوْلُ مَنْ صَلّٰى عَلَيْكَ صَلَّيْتُ عَلَيْهِ . وَمَنْ سَلَّمَ عَلَيْكَ سَلَّمْتُ عَلَيْهِ زَادَ فِيْ رِوَايَةٍ : فَسَجَدْتُّ لِلّٰهِ شُكْرًا . رواه احمد .

3 ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்Fப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு நாள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வெளியில் செல்லும்போது நானும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றேன். முடிவாக ஒரு பேரீத்த மர தோட்டத்திற்குச் சென்று நீண்ட நேரம் “ஸுஜூது” செய்துகொண்டிருந்தார்கள். அதனால் நபியவர்களுக்கு ஏதாவது ஏற்பட்டுவிட்டதோ! அல்லாஹ் அவர்களின் உயிரைக் கைப்பற்றி விட்டானோ என்று பயந்தேன். எனவே அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

(சிறிது நேரம் சென்றபின்) ஸுஜூதை விட்டு தங்களின் தலையை உயர்த்தி, அப்துர்ரஹ்மான் உங்களுக்கு என்ன! என்று விசாரித்தார்கள். நான் எனது பயத்தைக் கூறினேன். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள், ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் என்னிடம் வந்து, நான் உங்களுக்கு சுபச் செய்தி கூறட்டுமா? (என்று கூறியபின்) அல்லாஹ் இவ்வாறு கூறினான் என்று கூறினார்கள்; அதாவது ஒருவர் உங்கள் மீது ஸலவாத் கூறினால் நானும் அவர் மீது ஸலவாத் கூறுகின்றேன். அவர் உங்கள் மீது ஸலாம்

கூறினால் நானும் அவர்மீது ஸலாம் கூறுகின்றேன்.

மற்றொரு அறிவிப்பில்: அல்லாஹ் வழங்கிய இந்த சிறப்பிற்காக அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு ஸஜ்தா செய்கின்றேன் என்று கூறினார்கள் (***அஹ்மது***)

٤ وَعَنْ اَبِىْ بُرْدَةَ بْنِ نِيَارٍ رَضِىَ اللّٰهُ عَنْهُ قَالَ . قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ صَلَّى عَلَيَّ مِنْ اُمَّتِىْ صَلَاةً مُخْلِصًا مِّنْ قَلْبِهٖ صَلَّى اللّٰهُ عَلَيْهِ بِهَا عَشْرَ صَلَوَاتٍ وَرَفَعَهُ بِهَا عَشَرَ دَرَجَاتٍ . وَكَتَبَ لَهُ بِهَا عَشَرَ حَسَنَاتٍ . وَمَحَا عَنْهُ بِهَا عَشَرَ سَيِّئَاتٍ . رواه النسائى . والطبرانى . والبزاز .

4 ஹழ்ரத் அபூபுர்தாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்: நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்: எனது உம்மத்திலுள்ள ஒருவர் என்மீது தூய்மையான மனதுடன் ஸலவாத் கூறினால் அல்லாஹு தஆலா அவருக்கு பத்து தடவை ஸலவாத் - அருள்புரிகின்றான். மேலும் அவர் ஸலவாத் கூறியதன் காரணத்தால் 10 அந்தஸ்துக்களையும் உயர்வாக வழங்கிய பத்து நன்மைகளையும் எழுதி, இன்னும் அவரின் பத்து தீமைகளையும் அழித்து விடுகின்றான். (***நூல்: நஸயீ, தப்ரானீ, பZஜாஜ்***)

70 ஸலவாத்

٥ وَعَنْ عَبْدُ اللّٰهِ بْنِ عَمْرُو بْنِ الْعَاصِ رَضِىَ اللّٰهُ عَنْهُمَا قَالَ : مَنْ صَلّٰى عَلَى النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاحِدَةً صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَمَلٰٓئِكَتُهُ سَبْعِيْنَ صَلَاةً . رواه احمد باسناد حسن

5 ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அம்ருப்னுல் ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்: ஹழ்ரத் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஒரு ஸலவாத் கூறுபவருக்கு அல்லாஹ்வும் இன்னும் அவனுடைய அமரர்களும் அவர்மீது 70 ஸலவாத் கூறுகின்றனர்.

(நூல்: அஹ்மது)

வெள்ளிக்கிழமை ஸலவாத் ஓதுவதின் பலன்

٦ وَعَنْ اَنَسٍ رَضِىَ اللهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَكْثِرُوْا الصَّلَاةَ عَلَىَّ يَوْمَ الْجُمُعَةِ فَاِنَّهُ اَتَانِىْ جِبْرِيْلُ اٰنِفًا عن رَبِّهِ عَزَّ وَجَلَّ فَقَالَ : مَا عَلَى الْاَرْضِ مِنْ مُّسْلِمٍ يُصَلِّىْ عَلَيْكَ مَرَّةً وَاحِدَةً اِلَّا صَلَّيْتُ اَنَا وَمَلٰئِكَتِىْ عَلَيْهِ عَشْرًا . رواه الطبرانى .

6 ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஜும்முஆ நாளில் என்மீது அதிகமாக ஸலவாத் கூறுங்கள். ஏனெனில் சிறிது நேரத்திற்கு முன் ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் அல்லாஹ் கூறிவிட்டதை என்னிடம் கூறினார்கள்.

இப்பூமியில் ஒரு முஸ்லிம் உங்கள் மீது ஒரு தடவை ஸலவாத் கூறினால் நானும் எனது அமரர்களும் அவர் மீது பத்து தடவை ஸலவாத் கூறுகின்றோம். *(தப்ரானீ)*

٧ وَعَنْ اَبِىْ امامَةَ رَضِىَ اللهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : مَنْ صَلّٰى عَلَىَّ مَرَّةً صَلَّى اللهُ عَلَيْهِ عَشْرًا .

PDF ISLAM

مَلَكٌ مُوَكَّلٌ بِـهَا حَتّٰى يُبَلِّـغَـنِـيْـهَا . رواه الطبراني .

7 ஹழ்ரத் உமாமா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்: என்மீது ஒரு தடவை ஸலவாத் கூறுபவருக்கு அல்லாஹ் அவர் மீது 10 ஸலவாத் - அருள்புரிகின்றான். இதற்காக நியமிக்கப்பட்ட மலக் அவர் கூறிய ஸலவாத்தை என்னிடம் சேர்ப்பிக்கின்றார். *(நூல்: தப்ரானீ)*

உலகை சுற்றி வரும் மலக்

٨ وعن ابن مسعود رضى الله عنه عن النبى صلى الله عليه وسـلم قال : اِنَّ لِلّٰهِ مَلٰٓئِكَةً سَيَّاحِيْنَ يُبَلِّغُوْنِـيْ عَنْ اُمَّتِـىَ السَّلَامَ رواه النسائى .

8 ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின் றார்கள்: நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வுக்கு உலகை சுற்றிவரும் அமரர்களும் இருக்கின்றனர். அவர்கள் என் உம்மத்தினர்கள் கூறுகின்ற ஸலவாத்தை என்னிடம் சேர்த்து வைக்கின்றனர். *(நூல்: நஸயீ)*

٩ وَعَنْ حَسَنِ بْنِ عَلِى رَضِىَ اللّٰهُ عَنْهُمَا اَنَّ رَسُوْلَ اللّٰهِ صَلَّـى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : حَيْثُمَا كُنْتُمْ فَصَلُّوْا عَلَيَّ . فَاِنَّ صَلَاتَكُـمْ تَبْلُـغُـنِـيْ . رواه الطبرانى

9 ஹழ்ரத் ஹஸன் இப்னு அலீ ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றார்கள். நிச்சயமாக நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்; எங்கிருந் தாலும் என்மீது ஸலவாத் கூறுங்கள். நீங்கள் கூறுகின்ற ஸலவாத் என்னை அடைந்துவிடும்.

PDF ISLAM

١٠ وَعَنْ اَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : مَنْ صَلَّى عَلَيَّ بَلَغَتْنِيْ صَلَاتُهُ وَصَلَّيْتُ عَلَيْهِ . وَكُتِبَ لَهُ سِوٰى ذٰلِكَ عَشْرُ حَسَنَاتٍ .
رواه الطبراني

10 ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்; என்மீது ஸலவாத் கூறியவரின் ஸலவாத் எனக்கு சேர்த்து வைக்கப்படுகிறது. நான் அவருக்கு ஸலவாத் கூறுகின்றேன். (இதன் நன்மையும்) இது அல்லாத மற்ற 10 நன்மைகளும் அவர்மீது எழுதப்படுகின்றது. *(தப்ரானீ)*

١١ وَعَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ عَنْ رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : مَا مِنْ اَحَدٍ يُسَلِّمُ عَلَيَّ اِلَّا رَدَّ اللهُ اِلَـيَّ رُوْحِيْ حَتّٰى اَرُدَّ عَلَيْهِ السَّلَامَ . رواه احمد ، وابوداود

11 ஹழ்ரத் அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்; ஒரு முஸ்லிம் என்மீது ஸலாம் கூறினால் அல்லாஹ் என் உயிரைத் திருப்பித் தருகின்றான். நான் அவருடைய ஸலாமுக்கு பதில் ஸலாம் கூறுகின்றேன். *(நூல்: அஹ்மது, அபூதாவூது)*

விசேஷமான மலக்

١٢ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : اِنَّ لِلّٰهِ تَبَارَكَ وَتَعَالٰى مَلَكًا اَعْطَاهُ اَسْمَاءَ الْخَلَائِقِ فَهُوَ قَائِمٌ عَلٰى

قَبْرِىْ اِذَا مُتُّ فَلَيْسَ اَحَدٌ يُصَلِّىْ عَلَىَّ صَلَاةً اِلَّا قَالَ يَا مُحَمَّدُ صَلّٰى عَلَيْكَ فُلَانُ بْنُ فُلَانٍ . قَالَ : فَيُصَلِّى الرَّبُّ تَبَارَكَ وَتَعَالٰى عَلٰى ذٰلِكَ الرَّجُلِ بِكُلِّ وَاحِدَةٍ عَشْرًا الطبرانى

12 நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்விடம் (விசேஷமான) ஒரு மலக் இருக்கின்றார். அவரிடம் படைப்புகளின் அனைத்துப் பெயர்களையும் கொடுக்கப்பட்டுள்ளது. நான் இறந்த பின் அவர் என் கப்ரு அருகில் நிற்பார். எவராவது என்மீது ஸலவாத் கூறினால் அவர் என்னிடம் கூறுவார், யா முஹம்மத்! இன்னாருடைய மகன் இன்னார் உங்கள் மீது ஸலவாத் கூறினார், உயர்ந்த ரப்பான அல்லாஹ்! அம்மனிதர் கூறிய ஒவ்வொரு ஸலவாத்திற்குப் பதிலாக 10 தடவை ஸலவாத் - அருள்புரிகின்றான். *(நூல்: தப்ரானீ)*

நபியிடம் நெருக்கத்தைப் பெற்றவர்

١٣ وَعَنِ ابْنِ مَسْعُوْدٍ رَضِىَ اللّٰهُ عَنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ : اِنَّ اَوْلَى النَّاسِ بِىْ يَوْمَ الْقِيَامَةِ اَكْثَرُهُمْ عَلَىَّ صَلَاةً رواه الترمذى

13 ஹழ்ரத் இப்னு மஸ்ஊது ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகின்றார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள். என் மீது அதிகமாக ஸலவாத் கூறுபவர் மறுமை நாளில் எனது ஷபாஅத்துக்கு மிகவும் தகுதியானவராவார். *(நூல்: திர்மிதீ)*

١٤ وَعَنْ عَامِرِ بْنِ رَبِيْعَةَ عَنْ اَبِيْهِ رَضِىَ اللّٰهُ عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَخْطُبُ وَيَقُوْلُ " مَنْ صَلّٰى عَلَىَّ صَلَاةً

لم تنزل الملائكة تصلي عليه ما صلى علي فليقل عبد من ذلك او ليكثر . رواه احمد

14 நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் பிரசங்கம் செய்யும்போது செவியேற்றதாக ஹழ்ரத் ஆமிர் இப்னு ரபீஆ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் தந்தை கூறியதை அறிவிக்கின்றார்கள்: எவர் என் மீது ஸலவாத் கூறினால் அவர் என்மீது ஸலவாத் கூறும் காலமெல்லாம் அமரர்களும் அவர் மீது ஸலவாத் கூறுகின்றனர். எனவே ஓர் அடியான் குறைவாக அல்லது அதிகமாக ஸலவாத் கூறிக் கொள்ளவும். ***(நூல்:அஹ்மது)***

சொர்க்கத்தைக் காணும் பாக்கியம் பெற்றவர்

١٥ وعن انس رضي الله عنه قال : قال رسول الله صلى الله عليه وسلم: من صلى علي في يوم الف مرة لم يمت حتى يرى مقعده من الجنة . رواه ابو حفص بن شاهين

15 ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள். என்மீது ஒரு நாளில் ஆயிரம் தடவை ஸலவாத் கூறியவர் சொர்க்கத்திலுள்ள தனது இருப்பிடத்தை பார்க்காமல் மரணிப்பதில்லை. ***(அபூஹப்ஸ் இப்னு ஷாஹீன்)***

ஸலவாத் கூறுவதால் பாவங்கள் மன்னிக்கப்படும்

١٦ عن ابي كاهل رضي الله عنه قال : قال لي رسول الله صلى الله عليه وسلم: يا ابا كاهل من صلى علي كل يوم ثلاث مرات ، وكل ليلة ثلاث مرات حبا وشوقا الي كان حقا

عَلَى اللهِ اَنْ يَغْفِرَلَهُ ذُنُوْبَهُ تِلْكَ اللَّيْلَةَ ، وَذٰلِكَ الْيَوْمَ .

رواه ابن ابي عاصم والطبراني .

16 ஹழ்ரத் அபூகாஹில் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் என்னிடம் கூறினார்கள். யா அபா காஹில்! ஒருவர் என்மீது பிரியத்தோடும் பாசத்தோடும் ஒவ்வொரு நாளும் ஸலவாத் மூன்று தடவை, இன்னும் இரவிலும் மூன்று தடவை கூறினால் அவரின் அந்த நாளின் பாவத்தையும் இன்னும் அந்த இரவின் பாவத்தையும் மன்னிப்பது அல்லாஹ்வின் மீது அவசியமாகும். *(நூல்: தப்ரானீ)*

வெள்ளிக்கிழமை ஸலவாத் கூறுவதின் சிறப்பு

١٧ وعن ابي امامة رضى الله عنه قال : قال رسول الله صلى الله عليه وسلم: اَكْثِرُوْا عَلَيَّ مِنَ الصَّلَاةِ فِيْ كُلِّ يَوْمِ الْجُمُعَةِ فَاِنَّ صَلَاةَ اُمَّتِيْ تُعْرَضُ اِلَيَّ فِيْ كُلِّ يَوْمِ جُمُعَةٍ فَمَنْ كَانَ اَكْثَرَهُمْ عَلَيَّ صَلَاةً كَانَ اَقْرَبَهُمْ مِنِّيْ مَنْزِلَةً . رواه البيهقى

17 ஹழ்ரத் அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்: நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு ஜுமுஆ நாளிலும் என்மீது அதிகமாக ஸலவாத் கூறுங்கள். ஏனென்றால் எனது உம்மத்தினர் கூறக்கூடிய ஸலவாத்தை ஒவ்வொரு ஜுமுஆ நாளிலும் எனக்கு எடுத்துக்காட்டப்படுகிறது. அவர்களில் எவர் என்மீது அதிகமாக ஸலவாத் கூறுகின்றாரோ அவர் அவர்களைவிட என்னிடத்தில் நெருக்கமான அந்தஸ்துடைய வராவார். *(நூல்: பைஹகீ)*

ஸலவாத் கூறினால்தான் துஆ ஒப்புக் கொள்ளப்படும்

١٨ وَعَنْ عَلِيٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ ! كُلُّ دُعَاءٍ مَحْجُوْبٌ حَتّٰى يُصَلِّي عَلٰى مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ رواه الطبراني

18 ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்: அனைத்து துஆக்களும் ஹழ்ரத் முஹம்மது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் சொல்லும்வரை தடுக்கப் பட்டதாக இருக்கும்.

(நூல்: தப்ரானீ)

١٩ وَعَنْ عُمَرَبْنِ الْخَطَّابِ رَضِيَ اللّٰهُ عَنْهُ مَوْقُوْفًا قَالَ : إِنَّ الدُّعَاءَ مَوْقُوْفٌ بَيْنَ السَّمَآءِ وَالْاَرْضِ لَا يَصْعَدُ مِنْهُ شَيْءٌ حَتّٰى تُصَلِّي عَلٰى نَبِيِّكَ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ . رواه الترمذى

19 ஹழ்ரத் உமர் இப்னு கத்தாப் ரழியல்வாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: துஆ - பிரார்த்தனைகள் வானம், இன்னும் பூமி இவ்விரண்டுக்குமிடையில் நிற்பாட்டப் பட்டிருக்கும். நீ உனது நபீ ஹழ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறும்வரை எந்த துஆவும் அவ்விடத்தை விட்டும் ஏறாது. *(நூல்: திர்மிதீ)*

ஸலவாத் கூறாதவரின் தண்டனை

٢٠ وَعَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ اَنَّ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ صَعِدَ الْمِنْبَرَ فَقَالَ اٰمِيْنَ! اٰمِيْنَ! اٰمِيْنَ! قِيْلَ يَا رَسُوْلَ اللّٰهِ اِنَّكَ صَعِدتَّ الْمِنْبَرَ فَقُلْتَ اٰمِيْنَ، اٰمِيْنَ، اٰمِيْنَ .

PDF ISLAM

فَقَالَ ! اِنَّ جِبْرِيْلَ عَلَيْهِ السَّلَامَ اَتَانِــيْ فَقَالَ: مَــنْ اَدْرَكَ شَهْرَ رَمَضَانَ فَلَمْ يَــغْــفِرْلَهُ فَدَخَلَ النَّار فَاَبْعَدَهُ اللّٰهُ قُلْ اٰمِيْنَ فَقُلْتُ اٰمِيْنَ . وَمَنْ اَدْرَكَ اَبَوَيْهِ اَوْ اَحَدَهُمَــا فَلَــمْ يَــبَرَّهُمَا فَمَاتَ فَدَخَلَ النَّارَ فَاَبْعَدَهُ اللّٰهُ قُلْ اٰمِيْنَ فَقُلْــتُ اٰمِيْنَ وَمَنْ ذُكِرْتَ عِنْدَهُ فَلَمْ يُصَلِّ عَلَيْكَ فَمَاتَ فَدَخَــلَ النَّارَ فَاَبْعَدَهُ اللّٰهُ قُلْ اٰمِيْنَ فَقُلْتُ اٰمِيْنَ . رواه ابن خزيمة

20 ஹழ்ரத் அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மிம்பர் படி மீது ஏறும்போது ஆமீன்! ஆமீன்! ஆமீன்! (மூன்று தடவை) கூறினார்கள். (பின்பு) நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் யா ரஸூலல்லாஹ்! நீங்கள் (இன்று) மிம்பர்படி மீது ஏறும்போது ஆமீன்! ஆமீன்! ஆமீன்! என்று கூறினீர்கள்! என்ன (விளக்கம்) என்று கேட்டபோது கூறினார்கள்.

(நான் மிம்பர் படி மீது ஏறிக் கொண்டிருக்கும் போது) ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். எவர் புனித ரமழான் மாதத்தை அடைந்தும் (அதற்குரிய நற்காரியங்கள் செய்யா ததினால்) அவரின் பாவங்கள் மன்னிக்கப்படவில்லை. அதனால் அவர் நரகம் நுழைந்தார். எனவே, அல்லாஹ்! அவரை தூரமாக்கி விட்டான். (ஆகையால்) நீங்கள் ஆமீன்! (அப்படியே ஆகட்டும் என்று) கூறுங்கள் என்றார், நான் ஆமீன்! கூறினேன்.

(இரண்டாவது படியில் ஏறிக் கொண்டிருக்கும் போது) எவர் தனது பெற்றோர் இருவர் அல்லது இருவரில் ஒருவரையோ அடைந்து அவ்விருவருக்கும் பணிவிடைகள் செய்யவில்லை. எனவே அவர் நரகம் புகுந்தார். அல்லாஹ்வும் அவரை

PDF ISLAM

தூரமாக்கிவிட்டான். (எனவே, நீங்களும்) ஆமீன்! கூறுங்கள் என்றார். நான் ஆமீன்! கூறினேன்.

(மூன்றாவது படியில் ஏறிக் கொண்டிருக்கும்போது) ஒருவரிடம் உங்களின் பெயர் கூறப்பட்டு அதற்கு அவர் ஸலவாத் கூறவில்லை. அதனால் அவர் நரகம் புகுந்தார். அல்லாஹ்வும் அவரை தூரமாக்கி விட்டான். (எனவே) ஆமீன்! கூறுங்கள் என்றார். நான் ஆமீன்! கூறினேன்.

(இப்னு குஸைமா, இப்னு ஹப்பான்)

சொர்க்கத்தின் வழியை தவற விட்டவர்

٢١ وَعَنْ حُسَيْنِ بْنِ عَلِيٍّ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ ! مَنْ ذُكِرْتُ عِنْدَهُ فَخَطِئَ الصَّلَاةَ عَلَيَّ خَطِئَ طَرِيْقَ الْجَنَّةِ . رواه الطبراني

21 ஹழ்ரத் ஹுஸைன் இப்னு அலீ ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகின்றார்கள்: ஹழ்ரத் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஒருவரிடம் என்னைப்பற்றி கூறப்பட்டு அவர் எனக்கு ஸலவாத் கூறுவதில் (கூறாமல்) தவறிழைத்து விட்டால் அவர் சொர்க்கத்தின் வழியை தவறவிட்டவராவார். *(நூல்: தப்ரானீ)*

٢٢ وَعَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: مَنْ نَسِيَ الصَّلَاةَ عَلَيَّ خَطِئَ طَرِيْقَ الْجَنَّةِ

22 ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்; என்னைப் பற்றி கூறப்படும்போது என்மீது ஸலவாத் கூற மறந்துவிட்டவர் சொர்க்கத்தின் வழியை தவறவிட்டுவிட்டார். رواه ابن ماجه

PDF ISLAM

கஞ்சன் யார்?

٢٣ وَعَنْ حُسَيْنٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ اَلْبَخِيْلُ مَنْ ذُكِرْتُ عِنْدَهُ فَلَمْ يُصَلِّ عَلَيَّ . رواه النسائى

23 ஹழ்ரத் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள். என் பெயர் கூறப்படும்போது அதற்கு (பதிலாக) ஸலவாத் கூறாதவர் கஞ்சனாவான்.

(நூல்: நஸயீ)

மனிதர்களிலே மிகப் பெரிய கஞ்சன்

٢٤ وَعَنْ اَبِيْ ذَرٍّ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ ! خَرَجْتُ ذَاتَ يَوْمٍ فَاَتَيْتُ رَسُوْلَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : اَلَآ اُخْبِرَكُمْ بِاَبْخَلِ النَّاسِ ؟ قَالُوْا بَلٰى يَا رَسُوْلَ اللّٰهِ قَالَ : مَنْ ذُكِرْتُ عِنْدَهُ فَلَمْ يُصَلِّ عَلَيَّ فَذٰلِكَ اَبْخَلُ النَّاسِ.
ابن ابى عاصم

24 ஹழ்ரத் அபூதர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்; ஒரு நாள் நான் வீட்டிலிருந்து வெளியாகி நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் சென்றேன். அப்பொழுது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்; மனிதர்களிலே மிகப்பெரிய கஞ்சன் யார்? என்று நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என்று கேட்டபோது நபித்தோழர்கள் ஆம்! யா ரஸூலல்லாஹ்! (அறிவியுங்கள்) என்றனர். என் பெயர் ஒருவரிடம் கூறப்பட்டும் அவர் என்மீது ஸலவாத் கூறவில்லை. அதனால் அவர் மனிதர்களிலே மிகப் பெரிய கஞ்சனாவான் என்று கூறினார்கள். *(இப்னு அபீஆஸிம்)*

இழிவுக்குரியவர்

٢٥ وَعَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ
عَلَيْهِ وَسَلَّمَ رَغِمَ اَنْفُ رَجُلٍ ذُكِرْتُ عِنْدَهُ فَلَمْ يُصَلِّ عَلَيَّ .

25 ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; ஹழ்ரத் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள், ஒருவரிடம் என் பெயர் கூறப்பட்டு அதற்கு(ப் பதிலாக) ஸலவாத் கூறாதவரின் மூக்கு இழிவடையட்டும். *(நூல்: திர்மிதீ)*

٢٦ وَعَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ
عَلَيْهِ وَسَلَّمَ: لَا تَجْعَلُوْا قَبْرِيْ عِيْدًا . وَصَلُّوْا عَلَيَّ فَاِنَّ
صَلَاتَكُمْ تَبْلُغُنِيْ حَيْثُ كُنْتُمْ . رواه ابوداؤد

26 ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்; என் கப்ரு - மண்ணறையை பெருநாள் கொண்டாடுவதைப் போன்று ஆக்கிவிடாதீர்கள். நிச்சயமாக நீங்கள் எங்கிருந்து ஸலவாத் கூறினாலும் அது என்னை அடைந்து விடும். *(நூல்: அபூதாவூத்)*

துஆச் செய்யும் முறை

٢٧ وَعَنْ فَضَالَةَ بْنِ عُبَيْدٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ سَمِعَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى
اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ رَجُلًا يَدْعُوْ فِيْ صَلَاتِهِ وَلَمْ يَحْمَدِ اللّٰهَ
تَعَالٰى وَلَمْ يُصَلِّ عَلَى النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ .
فَقَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ عَجِلَ هٰذَا ثُمَّ دَعَاهُ

PDF ISLAM

فَقَالَ لَهُ اَوْ لِغَيْرِهٖ اِذَا صَلّٰى اَحَدُكُمْ فَلْيَبْدَاْ بِتَحْمِيْدِ رَبِّهٖ سُبْحَانَهُ وَالثَّنَاءِ عَلَيْهِ ثُمَّ يُصَلِّيْ عَلَى النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ ثُمَّ يَدْعُوْ بَعْدُ بِمَا شَاءَ . رواه ابوداؤد والترمذى

27 ஹழ்ரத் பழாலத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு நபித்தோழர் துஆச் செய்யும் போது ஹம்து - அல்லாஹ்வைப் புகழவில்லை. இன்னும் அவர் ஸலவாத் - ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் கூறவில்லை. அத்தகைய தோழரைப் பற்றி கேள்விப்பட்ட நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள், இந்த மனிதர் அவசரப்பட்டு (ஹம்து, ஸலவாத்தை) விட்டுவிட்டார் என்று கூறிய பின் அவரையோ அல்லது மற்றவரையோ அழைத்துக் கூறினார்கள்:

உங்களில் ஒருவர் துஆச் செய்ய விரும்பினால் முதலில் பரிசுத்தமான அல்லாஹ்வைப் புகழ்ந்து துஆவை ஆரம்பித்து, பின்பு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறியபின் அவர் நாடியபடி துஆச் செய்யட்டும்.

(நூல்: அபூதாவூது, திர்மிதீ)

ஸலவாத் கூறும்முறை

٢٨ وَعَنْ اَبِيْ مُحَمَّدٍ كَعْبِ بْنِ عُجْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ خَرَجَ عَلَيْنَا النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقُلْنَا يَا رَسُوْلَ اللّٰهِ قَدْ عَلِمْنَا كَيْفَ نُسَلِّمُ عَلَيْكَ . فَكَيْفَ نُصَلِّيْ عَلَيْكَ ؟ قَالَ : قُوْلُوْا اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اٰلِ

PDF ISLAM

إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ . اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اٰلِ إِبْرَاهِيمَ إِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ .

متفق عليه

28 ஹழ்ரத் அபூமுஹம்மது கஃபு இப்னு உஜ்ரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்; எங்களிடம் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வந்தார்கள், அப்பொழுது யா ரஸூலல்லாஹ்! உங்கள் மீது ஸலாம் கூறுவதை நாங்கள் அறிந்திருக் கின்றோம். ஆனால் நாங்கள் உங்கள் மீது எப்படி ஸலவாத் கூறுவது? என்று கேட்டபோது இவ்வாறு கூறுங்கள் என்று சொன்னார்கள்.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்(வ்), வ அலா ஆலி முஹம்மதின், கமா ஸல்லைத்த, அலா ஆலி இப்ராஹீம, இன்னக்க ஹமீதும் மஜீத்.

அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின்(வ்), வ அலா ஆலி முஹம்மதின், கமா பாரக்த்த அலா ஆலி இப்ராஹீம, இன்னக்க ஹமீதும் மஜீத். (நூல்: புகாரீ, முஸ்லிம்)

பொருள்: யா அல்லாஹ்! ஹழ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் குடும்பத்தார் களுக்கு நீ ஸலவாத் - அருள்புரிந்தது போன்று ஹழ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தார் களுக்கும் நீ அருள்புரிவாயாக! நிச்சயமாக நீ புகழுக்குரியவன்; மகத்தானவன்.

٢٩ وَعَنِ ابْنِ مَسْعُوْدٍ الْبَدْرِيِّ رَضِيَ اللّٰهُ عَنْهُ: اَتَانَا رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَنَحْنُ فِيْ مَجْلِسِ سَعْدِ بْنِ عُبَادَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ فَقَالَ لَهُ بَشِيْرُ ابْنُ سَعْدٍ اَمَرَنَا اللّٰهُ

اَنْ تَصَلِّيَ عَلَيْكَ يَا رَسُوْلَ اللهِ فَكَيْفَ نُصَلِّى عَلَيْكَ فَسَكَتَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ حَتّٰى تَمَنَّيْنَا اَنَّهُ لَمْ يَسْأَلْهُ. ثُمَّ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قُوْلُوْا . اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَبَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ وَالسَّلَامُ كَمَا قَدْ عَلِمْتُمْ. رواه مسلم

29. ஹழ்ரத் இப்னு மஸ்ஊத் பத்ரீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்; நாங்கள், சஃது இப்னு உபாதா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சபையில் இருக்கும்போது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எங்களிடம் வந்தார்கள். அப்போது பஷீர் இப்னு சஃது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் யா ரஸூலல்லாஹ்! அல்லாஹு தஆலா உங்கள் மீது ஸலவாத் கூறும்படி எங்களுக்கு உத்தரவிட்டுள்ளான். எனவே, நாங்கள் உங்கள் மீது எப்படி ஸலவாத் கூறுவது என்று வினவினார். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சிறிது நேரம் அமைதியாக இருந்தார்கள். (இதனால்) இக்கேள்வியை நாங்கள் கேட்காமல் இருந்திருக்கலாமோ என்று எண்ணினோம். (சிறிது நேரம் சென்றபின்) நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்(வ்), வ அலா ஆலி முஹம்மதின், கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம். வ பாரிக்க அலா முஹம்மதின்(வ்), வ அலா ஆலி முஹம்மதின், கமா பாரக்த்த அலா ஆலி இப்ராஹீம, இன்னக்க ஹமீதும் மஜீத்.

PDF ISLAM

யா அல்லாஹ்! ஹழ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு நீ பரகத் (அபிவிருத்தியான நல்லவாழ்க்கை) செய்தது போன்று ஹழ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தார்களுக்கும் நீ பரகத் செய்வாயாக! நிச்சயமாக நீ புகழுக்குரியவன்; மகத்தானவன்.

இவ்வாறு கூறிய பின் என்மீது ஸலாம் கூறுவது நீங்கள் அறிந்தது போன்றுதான், என்றும் கூறினார்கள். ***(நூல்: முஸ்லிம்)***

٣٠ وَعَنْ اَبِىْ حُمَيْدِ السَّاعِدِىْ رَضِىَ اللّٰهُ عَنْهُ قَالَ . قَالُوْا يَا رَسُوْلَ اللّٰهِ كَيْفَ نُصَلِّىْ عَلَيْكَ ؟ قَالَ قُوْلُوْا . اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اَزْوَاجِهٖ وَذُرِّيَّتِهٖ كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ . وَبَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اَزْوَاجِهٖ وَذُرِّيَّتِهٖ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ. متفق عليه .

30 ஹழ்ரத் அபூ ஹுமைதிஸ் ஸாஇத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். (சஹாபாக்கள்) யா ரஸூலல்லாஹ்! நாங்கள் உங்கள் மீது எவ்வாறு ஸலவாத் கூறுவது? என்று கேட்டபோது இவ்வாறு கூறுங்கள் என்று கூறினார்கள்.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்(வ்), வ அலா அஜ்வாஜிஹி, வ துர்ரிய்யத்திஹி, கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம். வ பாரிக் அலா முஹம்மதின்(வ்), வ அலா அZஜ்வாஜிஹி, வ துர்ரிய்யத்திஹி, கமா பாரக்த்த அலா இப்ராஹீம். இன்னக்க ஹமீதும் மஜீத். ***(நூல்: புகாரீ, முஸ்லிம்)***

PDF ISLAM

ஸலவாத் கூறுவது தர்மம் செய்வதை போன்றதாகும்

٣١ وَعَنْ اَبِيْ سَعِيْدِ الْخُدْرِيِّ رَضِيَ اللّٰهُ عَنْهُ عَنْ رَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَنَّهُ قَالَ: اَيُّمَا رَجُلٍ مُسْلِمٍ لَمْ يَكُنْ عِنْدَهُ صَدَقَةٌ فَلْيَقُلْ فِيْ دُعَائِهِ: اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ عَبْدِكَ وَرَسُوْلِكَ. وَصَلِّ عَلَى الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ وَالْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ فَاِنَّهَا زَكَاةٌ. وَقَالَ: لَا يَشْبَعُ مُؤْمِنٌ خَيْرًا حَتّٰى يَكُوْنَ مُنْتَهَاهُ الْجَنَّةَ. رواه ابن حبان

31 ஹழ்ரத் அபூ சயீது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியதை அறிவிக்கின்றார்கள்: முஸ்லிமான ஒருவரிடத்தில் சதகா செய்வதற்கு (பொருள், பணம்) ஏதும் இல்லாவிட்டால் அவர் துஆச் செய்யும்போது இவ்வாறு கூறிக் கொள்ளவும். "*அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் அப்தி(க்)க, வ ரஸூலி(க்)க, வ ஸல்லி அலல் முஃமினீன வல் முஃமினாத்தி, வல் முஸ்லிமீன, வல் முஸ்லிமாத்தி*" இவ்வாறு அவர் கூறுவது ஜகாத் கொடுத்ததை போன்றதாகும்.

மேலும் கூறினார்கள்; ஒரு முஃமினான மனிதர் அவரின் முடிவின் நோக்கமாக "சொர்க்கம்" ஆகும்வரை நற்காரியங்களால் அவர் வயிறு நிரம்பியவராக ஆகமாட்டார். ***(இப்னு ஹிப்பான்)***

இருவரின் பாவங்கள் மன்னிக்கப்படும்

٣٢ وَعَنْ اَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ عَنْ رَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ

عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَا مِنْ عَبْدَيْنِ مُتَحَابَّيْنِ يَسْتَقْبِلُ أَحَدُهُمَا صَاحِبَهُ وَيُصَلِّيَانِ عَلَى النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَمْ يَتَفَرَّقَا حَتَّى يُغْفَرَ لَهُمَا ذُنُوْبُهُمَا مَا تَقَدَّمَ مِنْهُمَا وَمَا تَأَخَّرَ . رواه ابو يعلى

32 ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்: ஹழ்ரத் முஹம்மது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்: பிரியமான இரண்டு அடியார்கள் ஒருவர் ஒருவரை சந்திக்கும்போது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறினால் அவ்விருவரும் பிரிவதற்கு முன் அவர்களின் முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. ***(அபூ யஃலா)***

1000 நாட்கள் நன்மை எழுதப்படும்

٣٣ وَعَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ قَالَ: جَزَى اللهُ عَنَّا مُحَمَّدًا مَّا هُوَ اَهْلُهُ أَتْعَبَ سَبْعِيْنَ كَاتِبًا اَلْفَ صَبَاحٍ رواه الطبراني

33 ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக் கின்றார்கள்: நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள். எவர் "*ஜZஜல்லாஹு அன்னா முஹம்மதன், மா ஹுவ அஹ்லுஹு*," (பொருள்:- அல்லாஹு தஆலா ஹழ்ரத் முஹம்மது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு நமது சார்பாக எது தகுதியோ அந்த நற்கூலியை வழங்குவானாக!) என்று கூறினால் அவர் எழுபது (மலக்) எழுத்தார்களை ஆயிரம் நாட்கள் (அதன் நன்மைகளை எழுதுவதற்கு) கஸ்டப்படுத்திவிட்டார். ***(நூல்: தப்ரானீ)***

நபியவர்களின் நெருக்கத்தையும் ஷபாஅத்தையும் பெற்றவர்.

٣٤ وَعَنْ رَفِيْعِ بْنِ ثَابِتِ الْاَنْصَارِيِّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ قَالَ: اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَاَنْزِلْهُ الْمَقْعَدَ الْمُقَرَّبَ عِنْدَكَ يَوْمَ الْقِيٰمَةِ وَجَبَتْ لَهُ شَفَاعَتِيْ . رواه البزاز والطبرانى

34 ஹழ்ரத் ருவைபிஃ இப்னு தாபித் அன்சாரீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள். **எவர்** "*அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்(வ்), வ* ***அன்Zஜில்ஹு***‍*ல் மக்அதல் மு கர்ரப இன்தக யவ்மல்* ***கியாமத்தி***" (பொருள்:- யா அல்லாஹ்! ஹழ்ரத் முஹம்மது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறுவாயாக! மறுமை நாளில் அவர்களுக்கு உன்னிடத்தில் நெருக்கமான அந்தஸ்தை வழங்குவாயாக!) என்று கூறினால் அவருக்கு எனது ஷபாஅத் - ஷிபாரிசு கட்டாயமாக கிடைக்கும். ***(நூல்: தப்ரானீ)***

அழகான முறையில் ஸலவாத் கூறவேண்டும்

٣٥ وَعَنِ ابْنِ مَسْعُوْدٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ ! اِذَا صَلَّيْتُمْ عَلٰى رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَاَحْسِنُوْا الصَّلَاةَ فَاِنَّكُمْ لَا تَدْرُوْنَ لَعَلَّ ذٰلِكَ يُعْرَضُ عَلَيْهِ . قَالَ . فَقَالُوْا لَهُ . فَعَلِّمْنَا . قَالَ قُوْلُوْا:اَللّٰهُمَّ اجْعَلْ صَلَوَاتَكَ وَرَحْمَتَكَ

وَبَرَكَاتَكَ عَلَى سَيِّدِ الْمُرْسَلِيْنَ . وَإِمَامِ الْمُتَّقِيْنَ
وَخَاتَمِ النَّبِيِّيْنَ مُحَمَّدٍ عَبْدِكَ وَرَسُوْلِكَ إِمَامِ
الْخَيْرِ وَقَائِدِ الْخَيْرِ وَرَسُوْلِ الرَّحْمَةِ. اَللّٰهُمَّ ابْعَثْهُ مَقَامًا
مَحْمُوْدًا يَغْبِطُهُ فِيْهِ الْاَوَّلُوْنَ وَالْاٰخِرُوْنَ . اَللّٰهُمَّ صَلِّ
عَلَى مُحَمَّدٍ وَّعَلَى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى اِبْرَاهِيْمَ
وَعَلَى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ . اَللّٰهُمَّ بَارِكْ عَلَى
مُحَمَّدٍ وَّعَلَى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى اِبْرَاهِيْمَ وَعَلَى
اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ. رواه ابن ماجة

35 ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறும்போது அழகான முறையில் கூறுங்கள். அது அவர்களுக்கு எடுத்துக்காட்டப்படக் கூடும் என்பது உங்களுக்குத் தெரியாது. நபித்தோழர்கள், எங்களுக்கு ஸலவாத் கூறும்முறையைக் கற்றுத்தாருங்கள் என்று கேட்டபோது இவ்வாறு கூறுங்கள் என்று சொல்லிக் கொடுத்தார்கள்:

அல்லாஹும் மஜ்அல் ஸலாதக்க, வ ரஹ்ம(த்)த(க்)க, வ பரகாத்த(க்)க அலா ஸய்யிதில் முர்ஸலீன், வ இமாமில் முத்தகீன். வ, காத்தமின் நபிய்யீன், முஹம்மதின் அப்தி(க்)க, வ ரஸூலி(க்)க, இமாமில் கைர், வ காயிதில் கைர், வ ரஸூலிர் ரஹ்மத், அல்லாஹும் மப்அஸ்ஹு மகாமம் மஹ்மூதா, யஃபி(த்)துஹு, Fபீஹில் அவ்வலூன வல் ஆகிருன்.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்(வ்), வ அலா

ஆலி முஹம்மதின், கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம, வ அலா ஆலி இப்ராஹீம, இன்னக்க ஹமீதும் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின்(வ்) வ அலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த்த அலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்.

٣٦ وَعَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ قَالَ: مَا جَلَسَ قَوْمٌ مَجْلِسًا لَمْ يَذْكُرُوْا اللّٰهَ فِيْهِ وَلَمْ يُصَلُّوْا عَلٰى نَبِيِّهِمْ اِلَّا كَانَ عَلَيْهِمْ تِرَةٌ فَاِنْ شَاءَ عَذَّبَهُمْ وَاِنْ شَاءَ غَفَرَ لَهُمْ . رواه ابوداؤد والترمذى

36 ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஒரு கூட்டம் ஓர் இடத்தில் அமரும்போது அல்லாஹ்வை திக்ரு - நினைவு கூறாமலும் இன்னும் அவர்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறாமலும் அமர்ந்திருந்தால் அது அவர்களுக்குப் பாதகமான குற்றமாகும். அல்லாஹ் நாடினால் அவர்களை மன்னிப்பான். அவன் நாடினால் அவர்களை வேதனையும் செய்வான். *(நூல்: அபூதாவூது, திர்மிதீ)*

ஸலவாத் கூறாதவர் சொர்க்கத்திலும் கவலைப்படுவார்

٣٧ وَعَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ . مَا قَعَدَ قَوْمٌ مَقْعَدًا لَمْ يَذْكُرُوْا اللّٰهَ عَزَّوَجَلَّ فِيْهِ . وَيُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اِلَّا

كَانَ عَلَيْهِمْ حَسْرَةً يَوْمَ الْقِيٰمَةِ وَإِنْ دَخَلُوا الْجَنَّةَ لِلثَّوَابِ . رواه احمد

37 ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ஒரு கூட்டம் ஒரு இடத்தில் அமரும்போது கண்ணியமிக்க அல்லாஹ்வை நினைவு கூறாமலும் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறாமலும் அமர்ந்திருந்தால் அவர்கள் மற்ற நன்மைகளினால் சொர்க்கம் சென்றிருந்தாலும் அது அவர்களுக்கு மறுமை நாளில் கைசேதப்படக்கூடிய ஒரு செயலாகும்.

(**நூல்: அஹ்மது**)

நபியவர்களின் ஷபாஅத்தைப் பெற்றவர்

٣٨ وَعَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرِوبْنِ الْعَاصِ رَضِيَ اللهُ عَنْهُمَا أَنَّهُ سَمِعَ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: إِذَا سَمِعْتُمُ الْمُؤَذِّنَ فَقُولُوا مِثْلَ مَا يَقُولُ ثُمَّ صَلُّوْا عَلَيَّ فَإِنَّهُ مَنْ صَلَّى عَلَيَّ صَلَاةً صَلَّى اللهُ عَلَيْهِ بِهَا عَشْرًا ثُمَّ سَلُوْا لِيَ الْوَسِيلَةَ فَإِنَّهَا مَنْزِلَةٌ مِنَ الْجَنَّةِ لَا تَنْبَغِيْ إِلَّا لِعَبْدٍ مِّنْ عِبَادِ اللهِ . وَأَرْجُوْ أَنْ أَكُوْنَ أَنَا هُوَ . فَمَنْ سَأَلَ اللهَ لِيَ الْوَسِيْلَةَ حَلَّتْ لَهُ الشَّفَاعَةُ . رواه مسلم . وابو داود والترمذى

38 நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூற ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அம்ருப்னுல் ஆஸ்

PDF ISLAM

ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் செவியேற்றதாக கூறுகின்றார்கள்: முஅத்தின் (பாங்கு) அழைப்பை நீங்கள் கேட்டால் அவர் சொல்வது போன்று நீங்களும் (திருப்பிச்) சொல்லுங்கள்.

மற்றொரு அறிவிப்பில்:- "*ஹய்ய அலஸ் ஸலாத்*" இன்னும் "*ஹய்ய அலல் Fபலாஹ்*" என்று கூறும்போது "*லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹி*" என்று பதில் கூறும்படி கூறப்பட்டுள்ளது.

பின்பு, என்மீது ஸலவாத் கூறுங்கள். என்மீது ஒரு ஸலவாத் கூறுபவருக்கு அல்லாஹு தஆலா பத்து தடவை ஸலவாத் கூறுகின்றான். பின்பு அல்லாஹு தஆலாவிடம் எனக்காக "வஸீலாவைக் கேளுங்கள். அது சொர்க்கத்தில் உண்டான அந்தஸ்த்தான உயர்ந்த பதவி. அல்லாஹ்வின் அடியார்களில் அது ஒருவருக்குத்தான் கிடைக்கும். அந்த ஒருவர் நானாக இருக்க விரும்பு கின்றேன். அல்லாஹ்விடம் எனக்காக இப்பதவியை கேட்பவருக்கு (மறுமை நாளில்) எனது ஷிபாரிசு கட்டாயமாகிவிட்டது *(நூல்: முஸ்லிம்)*

அதான் - பாங்கு துஆ

பாங்கு துஆவில் அல்லாஹ்விடம் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு அந்த அந்தஸ்த்தான உயர்ந்த பதவியை கொடுப்பாயாக! என்று கூறப்பட்டுள்ளது. எனவே, பாங்கு கூறும்போது அதற்குப் பதில் கூறியபின் பாங்கு துஆ ஓத வேண்டும்.

அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித், தஃவதித் தாம்மத்தி, வஸ் ஸலாத்தில் காயிமத்தி, ஆத்தி முஹம்மதினில் வஸீலத்த, வல் பழீலத்த, வப்அஸ்ஹு, மகாமம் மஹ்மூத னில்லதீ, வ அத்தஹு.

பொருள்:- பரிபூரணமான இந்த அழைப்புக்கு உரியவனே! மேலும் நிலைத்திருக்கக்கூடிய இந்த தொழுகைக்குரியவனே! ஹழ்ரத் முஹம்மது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு "வஸீலா" இன்னும் சிறப்புகளைக் கொடுப்பாயாக!

இன்னும் நீ வாக்களித்தபடி அவர்களை புகழப்பட்ட அந்தஸ்த்தில் (மறுமை நாளில்) எழுப்புவாயாக!

٣٩ وَعَنْ جَابِرٍ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ : مَنْ قَالَ حِيْنَ يَسْمَعُ النِّدَآءَ: اَللّٰهُمَّ رَبَّ هٰذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ وَالصَّلَاةِ الْقَآئِمَةِ اٰتِ مُحَمَّدَنِ الْوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ وَابْعَثْهُ مَقَامًا مَّحْمُوْدَانِ الَّذِىْ وَعَدْتَّهٗ حَلَّتْ لَهُ شَفَاعَتِىْ يَوْمَ الْقِيٰمَةِ رواه البخارى

39 ஹழ்ரத் ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்: எவர் பாங்கு (கேட்டு அதற்குப் பதில்) கூறியபின் (மேற்கூறப்பட்ட) துஆவை ஓதினால் அவருக்கு (மறுமை நாளில்) என் ஷிபாரிசு கட்டாயமாகிவிட்டது.

(நூல்: புகாரீ)

அல்லாஹ்வின் அறிவிப்பு

(மறுமை நாளில்) உமது இறைவன் உங்களை ***"மகாமம் மஹ்மூதா"*** (புகழப்பட்ட ஓர் அந்தஸ்தான உயர்ந்த) பதவியில் அமர்த்தலாம். ***(அல் குர்ஆன்: 17:19)***

ஹழ்ரத் இப்னு ஜரீர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த ஆயத்திற்கு அறிஞர்களில் அதிகமானோர் இவ்வாறு விளக்கம் கூறுகின்றனர். அதாவது ***"மகாமம் மஹ்மூதா"*** என்பது அந்தஸ்த்தான உயர்ந்த பதவிக்குரிய ஓர் இடம். அவ்விடத்தில் தான் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தங்களின் முழு உம்மத்தையும் அவர்களின் அந்த நாளின் கடினமான சோதனைகளிலிருந்து காப்பாற்றும்படி மகத்துவமிக்க அவர்களின் ரப்பிடம் ஷிபாரிசு செய்வார்கள். ***(நூல்: இப்னு கஸீர்)***

மஸ்ஜிதுக்குள் செல்லும்போதும் மஸ்ஜிதிலிருந்து வெளியாகும்போதும்

٤٠

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: إِذَا دَخَلَ اَحَدُكُمُ
الْمَسْجِدَ فَلْيُسَلِّمْ عَلَى النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلِّمْ ثُمَّ
لِيَقُلْ . اَللّٰهُمَّ افْتَحْ لِيْ اَبْوَابَ رَحْمَتِكَ . وَاِذَا خَرَجَ فَلْيَقُلْ
اَللّٰهُمَّ اِنِّيْ اَسْأَلُكَ مِنْ فَضْلِكَ . رواه مسلم وابوداؤد .
والنسائى وابن ماجة

40 நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் மஸ்ஜிதுக்குள் சென்றால் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது ***"ஸலாம்"*** கூறிக் கொண்டு, பின்பு ***"அல்லாஹும்ம மFப்தஹ் லீ அப்வாப ரஹ்மத்தி(க்)க".***

(பொருள்: யா அல்லாஹ்! உன் அருட்கொடை களின் வாசல்களை எனக்குத் திறந்து விடுவாயாக!)

(மஸ்ஜிதை விட்டும்) வெளியாகும் போது ***அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க மின் பழ்லிக்க.***

(பொருள்: யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னுடைய சிறப்புகளில் உள்ளவைகளை உன்னிடம் கேட்கின்றேன்.)

(நூல்: முஸ்லிம், அபூதாவூது, நஸயீ, இப்னு மாஜா)

PDF ISLAM